# ஜெபம்

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

### கட்டுரை – 7



# ஜெபம்

# இடைவிடாமல் ஜெபம்பண்ணுதல்

**"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களை யெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 3:10)**

## இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதால் வரும் ஆசீர்வாதங்கள்

இப்பாடத்தினை நாம் ஏழு தலைப்புகளின் கீழ்ப் பார்க்கப்போகின்றோம்:

(1) இடைவிடாமல் ஜெபம்பண்ணுதல்.

(2) இடைவிடாமல் ஜெபிக்கும் நிலைக்குள் நாம் வருவதற்கு அவசியமானவைகள்.

(3) இடைவிடாமல் ஜெபம்பண்ணுதலை ஒரு பழக்கமாகப் பெற்றிருப்பதன் பலன்கள்.

(4) ஜெபத்தில் விசுவாசத்தோடு எதிர்பார்த்திருத்தல்/ காத்திருத்தல்.

(5) ஜெபத்தில் காத்திருப்பதன் பலன்கள்.

(6) ஜெபத்தில் இருக்க வேண்டிய தீவிரம்/ஊக்கம்.

(7) தேவனிடத்திலும், நம்முடைய மீட்பராம் கிறிஸ்துவினிடத்திலும் கண்டடையப்படுகின்ற பலன்களாகிய இளைப்பாறுதல், சந்தோஷம் மற்றும் சமாதானம்.

"*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்*" என்று பரிசுத்த பவுல் அடிகளார் கொலோசெயருக்கு எழுதியுள்ளார். (கொலோசெயர் 4:2)

"*அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்*" என்று சங்கீதக்காரன் கூறியுள்ளார். (சங்கீதம் 55:17)

இப்பொழுதும் நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதைக் குறித்து - அதாவது இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருப்பதையும், எந்த ஒரு சமயத்திலும் இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதையும் குறித்து ஆராய்ச்சி செய்யலாம்.

## இடைவிடாமல் ஜெபம்பண்ணுதல்

இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதை ஒரு *பழக்கமாகப்* பெற்றிருப்பது என்றால் என்ன?

இது எல்லாச் சமயங்களிலும், எல்லா இடங்களிலும் தேவனோடு உரையாடும் ஒரு பழக்கமாகும்; இது ஜெபம்பண்ணு வதற்குரிய அவசரமான தருணங்களிலும், இப்படியான அவசரங்கள் இல்லாத தருணங்களிலும் தேவனோடு உரையாடும் பழக்கமாகும்; இது வெறுமனே ஜெப வார்த்தைகளை உச்சரிப்பதையோ அல்லது காலையில் நாம் விழிக்கையிலும், இரவில் நாம் இளைப்பாறப் போகையிலும் ஜெபம் ஏறெடுப்பதையோ குறிக்காமல், தொடர்ந்து ஜெப சிந்தையில் இருப்பதைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. ஒரு வரியினால் அல்லது ஒரு வார்த்தையினால்கூட ஜெபத்தை ஏறெடுக்கலாம் அல்லது வார்த்தைகளைச் சத்தமாய் உச்சரிக்காமல்கூட ஜெபத்தை ஏறெடுக்கலாம். நேரத்தையும், இடத்தையும்

பொருட்படுத்தாமலேயே இடைவிடாமல் ஜெபம்பண்ணலாம். ஒருவேளை இடத்தைப் பார்த்தே ஜெபம்பண்ண வேண்டும் என்று இருப்போமானால், நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ண முடியாது. ஒரு சம்பவத்தைக்குறித்த பதிவிலிருந்து, நாம் இங்குப் பாடம் ஒன்றினைக் கற்றுக்கொள்ளலாம். அது பின்வருமாறு:

அநேகம் ஊழியக்காரர்கள் பல்வேறு கேள்விகளைக்குறித்துக் கலந்துரையாடத்தக்கதாக ஒன்றுகூடி வந்திருந்தார்கள். இவர்கள் மத்தியில் "*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்*" எனும் கட்டளையை எப்படி நிறைவேற்றலாம் எனும் கேள்வி முன்வைக்கப்பட்டது. பல்வேறு கருத்துகளும், யூகங்களும் முன்வைக்கப்பட்டன; பின்னர் இவர்கள் மத்தியிலிருந்து ஒருவர், இக்கேள்விக்குக் கட்டுரை ஒன்றைத் தயாரித்து, அடுத்த கூட்டத்தின்போது வாசிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த விவாதங்களையெல்லாம் ஓர் எளிமையான, சாதுரியமான பணிப்பெண்ணாகிய சிறுமி கேட்டுக் கொண்டிருந்து, ஆச்சரியத்தோடு பின்வருமாறு கூறினாள்:

*சிறுமி* : என்ன! அந்த வசனத்தின் அர்த்தத்தைச் சொல்வதற்கு ஒரு மாதம் தேவையா! அது வேதாகமத்தினுடைய எளிமையான வசனங்களில் ஒன்றல்லவா!

***ஊழியக்காரன்***: ஓ! அப்படியா சொல்கிறாய் மேரி! சரி, அவ்வசனத்தைக்குறித்து உன்னால் எதையேனும் சொல்ல முடியுமா? அதை எப்படிப் புரிந்துவைத்திருக்கின்றாய், சொல் பார்க்கலாம். உன்னால் எல்லா நேரங்களிலும் ஜெபம்பண்ண முடியுமா?

*சிறுமி* : ஆம்! ஐயா.

**ஊழியக்காரன்:** என்ன சொல்கின்றாய்? இவ்வளவு பணிகள் இருக்கையில், உன்னால் இடைவிடாமல் ஜெபம்பண்ண முடியுமா?

*சிறுமி* : ஏன் ஐயா இப்படி ஆச்சரியப்படுகின்றீர்கள்? எனக்கு அதிகமாக வேலைகள் இருக்கும் போதுதான், என்னால் அதிகமாய் ஜெபமும் ஏறெடுக்க முடிகின்றது.

**ஊழியக்காரன்:** சரி மேரி, எப்படி இதைச் செய்கின்றாய் என்று எங்களுக்குச் சொல் பார்க்கலாம்; இப்படிச் செய்ய முடியாது என்றே எங்களில் பெரும்பான்மையானவர்கள் எண்ணம் கொண்டிருக்கின்றோம்.

*சிறுமி* : காலையில் முதலாவது கண் விழிக்கையில், நான்: ஆண்டவரே எனது புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறந்தருளும் என்று ஜெபம் பண்ணுவேன்; நான் உடைமாற்றும் போது, நீதியின் வஸ்திரத்தினால் என்னை உடுத்தும் படிக்கு ஜெபம்பண்ணுவேன்; குளிக்கும்போது மறுஜென்ம முழுக்கிற்காக வேண்டிக்கொள்வேன்; நான் பணிகளைச் செய்ய துவங்குகையில், என்னுடைய வேலைகளுக்குத் தக்கதான பெலத்தைத் தரும்படியாக ஜெபம் பண்ணுவேன். நெருப்பு மூட்டும்போது, தேவனுடைய கிரியைகளினால் எனது ஆத்துமா அனல் மூட்டப்படத்தக்கதாக

வேண்டிக்கொள்வேன். நான் வீட்டின் குப்பைகளைக் கூட்டிப்பெருக்குகையில், என்னுடைய இருதயமும் அசுத்தங்களிலிருந்து சுத்திகரிக்கப்படத்தக்கதாக வேண்டிக்கொள்வேன். காலை உணவை உட்கொள்கையில், மன்னாவினாலும், திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலினாலும் நான் போஷிக்கப்படுவதற்கு வாஞ்சிப்பேன்; மேலும் சிறு பிள்ளைகளை நான் பராமரித்துக் கொண்டிருக்கையில், நான் தேவனை என் தகப்பனாக எண்ணி நோக்கிப்பார்ப்பேன்; இப்படியே நாள் முழுவதும் செய்து கொண்டிருப்பேன். நான் செய்யும் ஒவ்வொரு பணியும், ஜெபத்திற்கடுத்த ஏதோ ஒரு சிந்தனையை எனக்குக் கொடுக்கின்றது.

***ஊழியக்காரன்:*** போதும், போதும் மேரி! "***ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்***" (மத்தேயு 11:25). மேரி! நீ இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதைத் தொடரு!

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே "*சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்துவார்*" (சங்கீதம் 25:9) என்று அவர் கூறியுள்ளதை நினைவில்கொள்வோமாக.

மனுஷனுடைய ஆவியே ஜெபம்பண்ணுகின்றது. அவனது சரீரம் வண்டியில் பிரயாணித்துக் கொண்டிருக்கையில் அல்லது

சாலையில் நடந்து கொண்டிருக்கையில் அல்லது தெருக்களில் ஜனக்கூட்டங்கள் மத்தியில் நிற்கையிலும்கூட, அவனது ஆவியானது அமைதியாய் (கிருபையின்) சிங்காசனத்திற்கு முன்பு செல்லக்கூடும். எந்த ஓர் இடத்திலிருந்து ஏறெடுக்கப் பட்டிருந்தாலும், எந்த ஒரு சமயத்தில் ஏறெடுக்கப்பட்டிருந்தாலும், அந்த உண்மையான ஜெபத்தைத் தேவன் ஏற்றுக்கொள்வார். ஆகையால் சகோதர சகோதரிகளே, எல்லாச் சமயங்களிலும், எல்லா இடங்களிலுமிருந்து ஜெபமானது நம்மால் ஏறெடுக்கப்படலாம்.

சரீரத்தினால் ஜெப நிலைக்குள் கடந்துவர இயலவில்லை என்றாலும், ஆவியினால் ஜெப சிந்தைக்குள் கடந்துவர இயலும். இக்கருத்தினை இடைவிடாமல் ஜெபம்பண்ண முடிகிறவனால் நன்கு புரிந்துகொள்ள இயலும். அவன் எல்லாச் சமயங்களிலும், எல்லா இடங்களிலுமிருந்து ஜெபம் பண்ணுகிறவனாக இருப்பான்.

அனைத்துக் காரியங்களும் தேவனிடம் ஜெபத்தில் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், அனைத்துக் காரியங்களும் அவரிடம் ஜெபத்தில் கொண்டுவரப்படலாம் என்றும், ஜெபிப்பதினால் நமக்கு எந்த நஷ்டமும் இல்லை என்றும் நாம் அறிந்து இருக்கின்றோம் மற்றும் அனுபவப்பூர்வமாக உணர்ந்தும் இருக்கின்றோம். ஜெபிப்பதற்கென்று எனக்கு எந்தக் காரியங்களும் இல்லை என்று நாம் ஒருபோதும் சொல்ல மாட்டோம். ஜெபிப்பதற்கென்று எந்த விசேஷித்த காரியங்களும் இல்லாத ஒரு நாள் என்று ஒன்று இருப்பதில்லை. அவ்வப்போது சில ஆபத்துகள் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகின்றன . . . நாம் சகிக்க வேண்டிய சில துன்பங்கள் வருகின்றன . . . ஆவிக்குரிய ஆறுதலும், ஆசீர்வாதமும் நமக்கு மிகவும் அவசியப்படும் சில தருணங்கள் வருகின்றன . . .

இப்படியான தருணங்களில் "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசவேண்டியுள்ளது"... "இருதயத்தின் நிறைவினால் வாய் *ஜெபத்தில்* பேச வேண்டியுள்ளது."

அவசர தேவைகள் இல்லாதபோதிலும், இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதற்கு அவசியமான திரளான காரியங்கள் காணப்படவே செய்கின்றன. அவை என்னவெனில், நாம் பரிசுத்தமுள்ளவர்களாகிட ஏங்கினவர்களாக, நமது இருதயங்களைத் தேவனிடமாகத் திருப்பி: "தேவனே, உம்முடைய ஆவியினாலே என்னைப் பரிசுத்தப்படுத்தி, கிறிஸ்துவைப்போல் என்னை மாற்றுவீராக!" என்று ஜெபம்பண்ணிடலாம். கிறிஸ்துவுக்காக அதிகம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினவர்களாக, நாம்: "ஓ! ஆண்டவரே, என்னுடைய சொந்த பலத்தினால் உம்மை என்னால் அன்புகூர இயலாது; நான் உம்மை எப்படி அன்புகூர வேண்டும் என்று விரும்புகின்றீரோ, அப்படியாக நான் உம்மை அன்புகூர உதவியருளும்" என்று ஜெபம்பண்ணிடலாம். தேவனுடைய திட்டங்கள் நிறைவேறும்படிக்கு ஜெபம்பண்ணிடலாம். ஒருவேளை வியாதிப்பட்டிருக்கும் ஒருவரைச் சந்திக்கத்தக்கதாக நடந்து சென்று கொண்டிருக்கையில், "தேவனே, நான் போவது பிரயோஜனமாகவும், ஏற்புடையதாகவும் இருக்கத்தக்கதாக உதவியருளும்" என்று ஜெபம்பண்ணிடலாம்.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, இடைவிடாமல் இப்படி ஜெபம்பண்ணுவது குறித்து அதிகமதிகமாக அறிந்து கொள்வோமாக. சங்கீதக்காரனோடுகூட நாம் அனைவரும், "***அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்***" என்று கூறத்தக்கதாக தேவன் உதவுவாராக. (சங்கீதம் 55:17)

## இடைவிடாமல் ஜெபிக்கும் நிலைக்குள் நாம் வருவதற்கு அவசியமானவைகள்

இதுவரை "இடைவிடாமல் ஜெபம்பண்ணுதல்" என்றால் என்ன என்பது குறித்துச் சிலவற்றைப் பார்த்திருக்கின்றோம். இப்பொழுதோ ***இடைவிடாமல் ஜெபிக்கும் நிலைக்குள் நாம் வருவதற்கு அவசியமானவைகள் எவை*** என்று கவனிக்கலாம்.

(ஜெபம்பண்ணுதலாகிய) நம்முடைய அந்தச் சிலாக்கியத்தைக் குறித்து, *நாம் உணர்ந்துகொள்ளுவதே* மிகவும் முக்கியமான கருத்தாக இருக்கின்றது; அதாவது தொழுதுகொள்கின்றவனாய்/ஆராதிக்கின்றவனாய் மட்டும் காணப்படுபவனைக்காட்டிலும் உயர்வான ஒரு நிலையில் காணப்படுவதற்கு நாம் சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம் என்றும், நாம் தேவனோடு ஐக்கியப்படும் (தொடர்புகொள்ளும்) சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம் என்றும் காணப்படுகின்ற உணர்ந்துகொள்ளுதலாகும்.

ஜெநிப்பிக்கப்படாதவர்கள் வேண்டுமென்றால் ஆராதிக்கலாம், ஆனாலும் இதைத் தாண்டி இவர்களால் கடந்துசெல்ல முடியாது. இவர்கள் தேவன் என்பவர், அண்டசராசரத்தில் மகா உன்னதமானவரென ஆராதிக்கப்பட வேண்டும் என்று உணர்ந்திருக்கலாம், ஆனாலும் தேவனோடு ஐக்கியம் (தொடர்பு) கொள்ளும் சிலாக்கியம் இவர்களுடையதாய் இருப்பதில்லை. ஆராதித்தல்/தொழுதுகொள்ளுதல் என்பது ***கடமையாகவும்***, ஐக்கியம் (தொடர்பு) கொள்ளுதல் என்பது ***சிலாக்கியமாகவும்*** இருக்கின்றது. தேவனோடு (தொடர்பு) ஐக்கியம்கொள்ளும் சிலாக்கியத்தினை அனுபவிப்பவர்களாகிய நாம், ஆராதிக்கின்றவர்களாய் மட்டும் காணப்படுபவர்களைவிட மிகவும் உயர்வான ஸ்தானத்தில் காணப்படுகின்றோம்; மேலும் ***இதைக்குறித்த***

*உணர்ந்துகொள்ளுதலானது, நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணுவதற்கு மிகுந்த உதவியாகக் காணப்படும்.*

பரிசுத்தமானவரைச் சரியாய்ப் புரிந்துகொள்ளும் ஒருவரின் மனதில் ஆழமான பயபக்தியும், பிரமிப்பும் நிரம்பிவிடுகின்றது. அவருக்கு முன்பாகத் தேவதூதர்கள்கூடத் தங்கள் முகங்களை மறைத்துக்கொள்கின்றனர்; ஆகையால் இதை இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறவர்களாகிய நாமும்கூட எப்போதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். தேவனோடு ஐக்கியம் (தொடர்பு) கொள்வதற்குரிய நம்முடைய சிலாக்கியத்தின் விஷயத்தில், பயபக்தியற்றுக் காணப்படுவதற்கு ஒருபோதும் துணிந்துவிட வேண்டாம். நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கின்றோம் என்பதை நாம் அறிய வருகையில், பிள்ளைகள் பெற்றோரிடத்தில் நடந்துகொள்வது போன்று, நாம் நம்முடைய தகப்பனிடத்தில் நடந்துகொள்வோமாக. ஒரு குழந்தையானவன் தனது பெற்றோருடன் தனக்கிருக்கும் உறவைக்குறித்த உணர்ந்துகொள்ளுதலினாலேயே, அனைத்துத் தருணங்களிலும் பெற்றோரிடம் வருகின்றவனாகவும், அனைத்தையும் குறித்து விசாரிக்கின்றவனாகவும் காணப்படுவான். அவன் இப்படி வருவதினால், தனது தகப்பனுக்காக அவன் கொண்டிருக்கும் மரியாதை எவ்வளவேனும் குறைந்து போகிறதில்லை. தனது பிள்ளை தன்னிடம் வாயைத் திறந்து பேசுவதற்கு முன்னதாக, சில சம்பிரதாயங்களையும், ஆச்சாரங்களையும் கடைப்பிடித்தாக வேண்டும் என்று எந்தத் தகப்பனும் எதிர்பார்க்கிறதில்லை. ஒருவேளை சம்பிரதாயங்களை யெல்லாம் தகப்பன் எதிர்பார்ப்பாரானால், பிள்ளையானவன் சிறு காரியங்களைக்குறித்து விசாரிக்க வேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்கிற தருணங்களில் தகப்பனிடம் செல்லாதவனாகவும், பெரிய காரியங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காக மாத்திரம்

தகப்பனிடம் செல்கின்றவனாகவும் இருந்துவிடுவான். இதனால் எத்தனைக் கடுமையான பின்விளைவுகள் நேரிடும் என்பதை சகோதர சகோதரிகளே, நீங்கள் அறிவீர்கள். பெரியளவிலான தீமைகள் சிறிய துவக்கங்களிலிருந்தே துளிர்விடுகின்றன. பிதாவினிடத்தில் நாம் சொல்லத் தவிர்க்கும் அந்தச் சின்ன சின்ன விஷயங்கள், தீமை வளர்வதற்குரிய துளிர்களாகக் காணப்பட்டு விடலாம். ஒருவேளை பிள்ளையானவனின் சரீரத்தில் வெளிப்படும் முதல் கட்ட வலிகள்குறித்து அன்புள்ள பெற்றோருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அந்தத் தகப்பன் பிள்ளைக்குக் கடுமையான நோயும், அதனால் பிற்பாடு வரும் தொல்லைக் கஷ்டங்களையும் தவிர்ப்பதற்கடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றவனாய்க் காணப்படுவான். இதுபோலவே ஜெபத்தில் நம்முடைய பிதாவிடம் சின்ன சின்ன காரியங்களைக் கொண்டு செல்லவில்லையெனில், நாமே காரியங்களை நம் சொந்த கரங்களில் எடுத்துக்கொள்ளுகின்றவர்களாகவும், காரியங்களைத் தவறாய் நடப்பிக்கின்றவர்களாகவும் இருந்து, ஆசீர்வாதங்களை இழந்துபோகின்றவர்களாக இருந்துவிடுவோம்; இதன்மூலம் பிரச்சனை அல்லது இழப்பு சம்பவிக்கக்கூடும். ஒருவேளை இம்மாதிரியான தருணங்களில் ஒரு சில வார்த்தைகள் அடங்கின ஜெபம் ஏறெடுக்கப்படுதல் அல்லது அக்காரியம் சம்பந்தமாகத் தேவனை நோக்கிப் பார்த்தல் என்பது, அக்காரியத்தைச் சரிப்படுத்தியிருந்திருக்கலாம். ஆனாலும் (பிதாவிடம் கொண்டுசெல்லாததால்) கடந்துவரும் இந்தச் சிட்சைகள் அவிசுவாசத்தின் காரணமாய்க் கொடுக்கப்படாமல், மாறாக ஜெபம் எனும் இச்சிலாக்கியத்தினைக்குறித்து நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்கேயாகும். ஆராதித்தல்/ தொழுதுகொள்ளுதல் சம்பந்தமான மற்ற அநேக சிலாக்கியங்களைப் பொறுத்தமட்டில், நாம்

பழக்கமுடையவர்களாகவும், அதை அனுபவிக்கின்றவர்களாகவும் இருப்பினும், மேற்கூறப்பட்டுள்ள ஜெபத்தின் விஷயத்தில் நாம் தவறுகிறவர்களாகவே காணப்படுவோம் என்பதைச் சகோதர சகோதரிகளே, நீங்கள் நினைவில்கொள்ளுங்கள். உதாரணத்திற்குத் தேவன் நமக்குச் சோதனைகளை அனுமதிக்கும்போது, அவர் நமது பிதாவென நமக்குக் கற்பித்துக் கொடுக்கின்றார் என்பதையும், நமக்கு அவசியமான ஏற்பாடுகள் அனைத்தையும் பொதுவான விதத்தில் ஏற்பாடு பண்ணிவிடுவார் என்பதையும் நம்மால் தெளிவாய்க் காணமுடியும்; ஆனாலும் அனைத்துக் காரியங்களையும் தேவனிடம் ஜெபத்தில் எடுத்துச்செல்வது தொடர்புடைய நம்முடைய சிலாக்கியம் குறித்த இந்த ஒரு குறிப்பிட்ட காரியத்தை உணர்ந்து கொள்வதற்குத் தவறிவிடுகின்றவர்களாய் இருப்போம்.

“நம் பாவங்களையும், துக்கங்களையும் சுமக்கும்
ஒரு நண்பன்தனை, இயேசுவில் பெற்றிருக்கின்றோமே!
சகலத்தையும் தேவனிடம் ஜெபத்தில் எடுத்துச்செல்லும்
எத்துணை மகா சிலாக்கியம்தனைப் பெற்றிருக்கின்றோமே!”

தேவனுடைய புத்திரர்கள் எனும் புத்திரத்துவத்தில் உள்ளடங்கும் இச்சிலாக்கியத்தினை அதிகமதிகமாக உணர்ந்து கொள்வதற்குப் பிரயாசப்படுவோமாக; ஆராதிக்கின்றவனாய் மட்டும் காணப்படுகிறவனைக்காட்டிலும் ***மிகவும் உயர்ந்த*** ஒரு ***ஸ்தானத்திற்கு*** நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நினைவில்கொள்வோமாக. இது மிகவும் ***நெருக்கமான*** ஒரு ஸ்தானமாகும்; அதாவது தேவனோடு பேசுவதற்கும், இன்னுமாக அவரிடம் எல்லாச் சமயங்களிலும், எல்லா இடங்களிலும் அனைத்துக் காரியங்களையும் எடுத்துச்செல்வதற்குமுரிய சிலாக்கியங்கள் உள்ள ஸ்தானமாகும்.

எனினும் இவைகள் அனைத்தையும்விட, நம்முடைய மனங்களிலும், இருதயங்களிலும் கிரியை புரியும் ***பரிசுத்த ஆவியே*** நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதற்கு உதவுகின்றதாயிருக்கும். தேவனுடைய பரிசுத்த ஆவி, பல்வேறு விதங்களில் கிரியை புரிகின்றது. அது நம்முடைய பகுத்தறியும் ஆற்றல் மீதும், நம்முடைய அறிவுக்கண்கள் மீதும், நம்முடைய எண்ணங்கள் மீதும், நம்முடைய பழக்கங்கள் மீதும்கூட அதன் செயலாக்கத்தைப் பெற்றிருக்கின்றது.

நம்முடைய மனதின் பழக்க வழக்கங்களானது, பரிசுத்த ஆவியினால் வனையப்பட்டுள்ளதாவெனப் பார்த்துக்கொள்வோமாக. ஏனெனில் மனதின் நாட்டமானது/மனநிலையானது தேவன் மீது பற்றுதல் கொண்டு காணப்படுமானால், அதுவே இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதற்குரிய மாபெரும் தூண்டுதலாய்க் காணப்படும். இவ்விதமாய்ப் பரிசுத்தமாக்கப்பட்ட மனமானது இயல்பாகவே பரிசுத்தமான சிந்தனைகளைச் சிந்திக்கிறதாகக் காணப்பட்டு, தொடர்ந்து ஜெப சிந்தையிலேயே காணப்படும். இம்மாதிரியான மனதிற்கு ஜெபம் என்பது, பிரயாசத்தினால் வருகிற ஒரு காரியமாய் இராமல், மனதிலிருந்து பொங்கி பெருக்கெடுத்து வருகின்ற காரியமாகவே காணப்படும். "***உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்***" எனும் வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கின்றோம் (ஏசாயா 26:3). கடுமையாய்ப் பிரயாசப்பட்டு நாம் ஜெபம்பண்ண வேண்டிய தருணங்களும் உண்டு என்பதில் ஐயமில்லை; விசேஷித்த சோதனை காலங்களில், விசேஷித்த துக்கங்களில் அல்லது விசேஷித்த போராட்டங்களில் நாம் ஜெபத்தை அதிக பிரயாசத்துடன்தான் ஏறெடுக்க வேண்டியிருக்கும்.

## இடைவிடாமல் ஜெபம்பண்ணுதலின் பலன்கள்

இப்பொழுதோ இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதை ஒரு *பழக்கமாகப்* பெற்றிருப்பதன் பலன்களைப் பார்க்கலாம்.

ஒரு பலனைக்குறித்து நாம் சற்று முன்புதான் பார்த்திருக்கின்றோம். இடைவிடாமல் ஜெபம்பண்ணுதல் என்பது, நமது மனதினுடைய ஆவிக்குரிய நிலையைச் சீராய் வைத்துக் கொள்வதற்கு உதவுகின்றதாயிருக்கும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் நிலையினின்று வழுவிப்போவதற்கு ஏதுவான நிலைமையில் நாம் காணப்படுவதை ஒவ்வொரு நாளும் காண முடிகின்றதல்லவா? இசை சுருதி பிறழும் வாய்ப்பினை உடைய சில நரம்பிசைக் கருவி போன்றே நாம் காணப்படுகின்றோம். மனித சரீரமானது சுத்தமான காற்றைச் சுவாசித்து, தொடர்ந்து புத்துணர்வடையாவிடில், அது தளர்ந்துபோகும். நம்முடைய மனித சரீரமானது எப்படிப் புத்துணர்வைச் சார்ந்துள்ளதோ, அதுபோலவே ஆவிக்குரிய ஜீவியமும் ஒரு புத்துணர்வைச் சார்ந்துள்ளது; இந்தப் புத்துணர்வானது ஜெபத்தின் மூலமாக வருகின்றது. நாம் கிருபையின் சிங்காசனத்திற்கு *அந்நியர்களாக/அதைக்குறித்து மறந்து போனவர்களாகக்* காணப்படக்கூடாது. உங்கள் ஜெபங்களை நிறுத்துவதற்கான சாத்தானின் பிரயாசங்களைப்போன்று, வேறு எதுவும் அவனுக்குப் பிரியமாய் இருப்பதில்லை. அவன் முடிந்த மட்டும் நம்முடைய அன்றாட ஜெப நேரங்களைக் கலைக்க முயற்சிசெய்து கொண்டிருப்பான்; ஒருவேளை அவனால் முடியவில்லையெனில், இடைவிடாமல் ஜெபம்பண்ணும் பழக்கத்திற்கு நாம் அந்நியர்களாகி, மறந்துபோகத்தக்கதாக முயற்சி செய்வான்.

நம்முடைய அன்றாட ஜீவியங்களிலும்கூட, நாம் ஒருகாலத்தில் சிலரிடம் நன்கு பழகி வந்திருப்போம்; ஆனால் அவர்களிடம் நாம்

அடிக்கடி பண்ணும் உரையாடல் படிப்படியாகக் குறைந்துபோகவே, காலங்கள் செல்லச்செல்ல, நெருக்கம் அப்படியே இல்லாமல் போய்விடுகின்றது; பின்னர் நம்மையும் அறியாமலேயே நாம் அந்நியர்களாகிப் போவதை அடிக்கடி உணர்ந்திருக்கலாம். இதுபோலவே தேவனுடைய பிள்ளைகளின் விஷயத்திலும்கூட, அவர்களைக் கிருபையின் சிங்காசனத்திற்கு அந்நியர்களாக்குவதற்குச் சாத்தான் முயலுகின்றான்; இப்படிச் செய்தால் தேவனோடு உரையாட இருதயத்திற்குப் படிப்படியாக விருப்பமற்றுப் போய்விடும் என்பதைச் சாத்தான் அறிவான். பின்னர் இந்தத் தேவ பிள்ளையானவனின் இருதயத்திலுள்ள நம்பிக்கை குறைந்து போய்விடும்; இப்படியாக இருதயம் (தேவனிடமிருந்து) ஒதுங்கி ஒதுங்கிப் போகையில், அது பிற்பாடு அதன் சுயநிலைக்கே திரும்பிவிடும். பின்னர் அந்த இருதயமானது, தேவனிடத்தில் எந்த ஒரு காரியத்தைக் குறித்தாவது பேசுவதற்கு முன்பாக, "நான் ஏதாகிலும் செய்ய வேண்டும்," அதாவது ஜெயம்கொள்வதற்கென (தன்சார்பில்/தான்) ஏதாகிலும் செய்ய வேண்டும் என்றெல்லாம் சிந்தித்துக்கொண்டிருக்கும். தேவனுக்கு அந்நியமாய்/தொலைவாய் இருத்தல் என்ற இந்த உணர்வானது, வேகமாய் வளர்ந்தோங்கக் கூடிய ஓர் உணர்வு என்பது உறுதியே.

இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதன் மற்றுமொரு நன்மையான பலன் பின்வருமாறு: பொதுவாகவே நம்முடைய ஜீவியத்தில் வரும் சின்ன சின்ன காரியங்கள் அனைத்தையும், அதாவது திரளான இவைகள் அனைத்தையும் நாம் தேவனிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்லலாம் என்பதேயாகும். ஒருவேளை இவைகள் ஜெபத்தில் எடுத்துச்செல்லப்படாத பட்சத்தில், நாம் மறந்து போய்விடவும்

வாய்ப்புள்ளது. சிறு விஷயங்கள் சீக்கிரம் மறக்கப்பட்டுப் போய்விடுகின்றன; எனினும் இவைகள் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்ற பிரகாரம், பெரும்பாலும் மிகவும் முக்கியமான காரியங்களாகக் காணப்படும். (சிலசமயங்களில்) இவைகள் தேவனிடம் ஜெபத்தில் நம்மால் கொண்டு செல்லப்படுவதற்கு முன்னதாகவே, நம்முடைய மனங்களில் மறக்கப்பட்டுப் போய்விடுகின்றன; இவைகள் நம் நினைவிலிருந்து போய்விட்டாலும் கூட, இவைகள் நடைமுறை வாழ்வினின்று போய்விடுவதில்லை. இவைகள் ஏதோ சில பலன்களைக் கொணரத்தக்கதாக, வேறு சில காரியங்களுடன் சம்பந்தப்பட்டுக் காணப்படும்.

இப்படி இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதன் மற்றுமொரு பலன் என்னவெனில், (பொதுவான காரியங்கள் ஒருபக்கமிருக்க) ***விசேஷமாய் கையிட்டுச் செய்யும் காரியங்களிலும்*** நாம் ஆசீர்வாதம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதேயாகும். ஏதோ ஒரு காரியத்தைச் செய்யப்போகின்றோம் என்றால், ஒருவேளை அதில் ஆசீர்வாதத்தினை நாம் வேண்டிக்கொண்டால், ஒருவேளை அக்காரியம் தீமையானவை அல்ல என்றால், அதில் நாம் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்கின்றவர்களாக இருப்போம். நாம் ***பொதுவான*** ஆசீர்வாதங்களுக்காகவும், ***விசேஷித்த*** ஆசீர்வாதங்களுக்காகவும் நாடவேண்டும். இடைவிடாமல் ஜெபம்பண்ணும் சிந்தையைப் பெற்றிருக்க நாடினவர்களாக, நாம்: "தேவனே இந்த ஒரு காரியத்தில் எனக்கு உதவியருளும்," "தேவனே அந்த ஒரு காரியத்திலிருந்து என்னை விலக்கிக் காத்தருளும்" என்று ஜெபித்துக்கொண்டிருப்போமாக; மேலும் விசேஷித்த ஆசீர்வாதம் நிச்சயமாகவே கடந்து வரும்.

ஒருவேளை இப்படி எப்பொழுதும் வேண்டிக் கொண்டிருப்போமானால், நாம் எப்பொழுதும் நன்றி செலுத்திக்கொண்டும் இருக்க வேண்டும். நம்முடைய தேவை எவ்வளவு பெரியதாக அல்லது பலதரப்பட்டதாக இருப்பினும், நமக்கு எப்போதுமே உதவி கிடைக்கும். நமக்கு "ஏற்ற சமயத்தின் சகாயம்" கிடைக்கும்; ஜீவியத்தினுடைய பல்வேறு மாற்றங்கள் மற்றும் அனுபவங்களின் மத்தியிலும்கூட உலகம் நமக்குத் தரக்கூடாததும், உலகம் நம்மிடமிருந்து எடுத்துப்போட முடியாததுமான *சமாதானத்தை* நாம் பெற்றுக்கொள்வோம்.

***"நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்; கர்த்தர் என்னை இரட்சிப்பார். அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்."*** (சங்கீதம் 55:16-17)

## ஜெபத்தில் விசுவாசத்தோடு காத்திருத்தல்

இப்பொழுதோ ஜெபத்தில் *விசுவாசத்தோடு காத்திருத்தல்* குறித்துச் சிறிது நேரம் பார்க்கலாம்.

ஜெபத்தில் காத்திருத்தல் என்றால் என்ன? பதில் வரும் என்று விசுவாசித்துக் காணப்படுவதாகும் - அதாவது பதிலுக்காக எதிர்நோக்கியிருத்தல் மற்றும் இப்படி எதிர்நோக்குவதில் பொறுமையாய்க் காத்திருத்தலாகும். பதில் கொடுக்கப்படும் என்ற உறுதியான எதிர்பார்ப்பு ஏதுமில்லாமலேயே, அநேகம் ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றன. நாம் தேவனிடத்திலும், மனிதனிடத்திலும் எவ்வளவு வித்தியாசமாய் நடந்துகொள்கின்றோம். ஏதேனும் விண்ணப்பத்திற்காக நாம் சக மனிதர்களிடத்தில் போகையில், வேண்டியதைப் பெற்றுக்கொள்வோம் என்று எதிர்பார்க்கின்றோம் அல்லது நம்புகின்றோம்; ஆனால் நாம் தேவனிடத்தில்

ஜெபம்பண்ணும்போது, அதுவும் திட்டவட்டமான காரியங்களுக்கு ஜெபம்பண்ணும்போதுகூட, ஏனோ பதில் வரும் என்ற எண்ணம் நமக்கு எப்போதும் இருப்பதில்லை; நாம் உண்மையில் எதிர்நோக்கிக் காத்திருப்பதுமில்லை. ஜெபங்களுக்குப் பதிலளிக்கப்படும் என்று தெரிவிக்கும் அநேக விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் வேதவாக்கியங்களில் பெற்றிருக்கின்றோம். அவைகளில் சிலவற்றைக் கீழே கொடுத்திருக்கின்றோம்:

**"நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்." (மாற்கு 11:24)**

**"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்." (மத்தேயு 7:7)**

**"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்." (யோவான் 14:13)**

**"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்." (யாக்கோபு 1: 5, 6)**

**"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." (யோவான் 15:7)**

மேலும் நிபந்தனைகளும் காணப்படுகின்றது என்று நாம் காண்கின்றோம் - அதாவது விசுவாசம் வைத்தல், அவரில் நிலைத்திருத்தல் மற்றும் அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருத்தல் என்பவைகளே அந்த நிபந்தனைகளாக இருக்கின்றன. நாம் கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம்பண்ண வேண்டும்; மேலும் கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம்பண்ணுதல் என்பது, கிறிஸ்துவின் சிந்தையில், சித்தத்தில் மற்றும் ஆவியில் ஜெபம்பண்ணும் காரியமாகக் காணப்படும்; ஆகையால் நம்முடைய ஜெபங்களுக்கான பதில் என்பது, நம்முடைய விண்ணப்பங்களின் பெரிய அல்லது சிறிய அளவைச் சார்ந்திராமல், அந்த ஜெபத்தை ஏறெடுக்கத் தூண்டின உந்துதல்/உணர்வின் மீதே சார்ந்துள்ளது. ஒருவேளை அந்த உந்துதல் நம்முடைய சொந்த சித்தத்திலிருந்து உருவாகி வந்திருக்குமானால், இந்த ஜெபம் கிறிஸ்துவின் நாமத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபமாக இருக்காது; ஆனால் ஜெபம்பண்ணுவதற்கான உந்துதலானது, தெய்வீகச் செயல்பாட்டின் காரணமாக உருவாகியிருக்குமானால், அது உண்மையில் கிறிஸ்துவின் நாமத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபமாகக் காணப்படும் மற்றும் அவருடைய பதிலையும் பெற்றுக்கொள்ளும். நாம் "அவரோடுகூட மரித்தவர்களாய்" இருப்பதினால், நமது கிறிஸ்தவ உடன்படிக்கையின்படியுள்ள பலியினைக்கொணர்வதில் ஜாக்கிரதையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும் - அதாவது நமது சித்தங்கள் சிலுவையில் அறையப்பட்டதாக இருக்க வேண்டும்.

*தேவனுடைய குணாதிசயங்கள் மற்றும் தன்மைகள் குறித்து நாம் சிந்தித்து தியானிப்பது என்பதும், ஜெபத்தில் நம்முடைய காத்திருத்தலைப் பலப்படுத்துகின்றதாக இருக்கும்.* தேவன் உண்மையுள்ளவர் என்பதை நாம் அறிவோம். அவர்

தம்முடைய பிள்ளைகளின் உண்மையான நலனுக்கடுத்த விஷயங்களைக்குறித்து அக்கறை உள்ளவராகக் காணப்படுகின்றார். அவர்களுக்கு நன்மையாய் இருக்கும் அனைத்தையும் அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார்; அவரது இருதயம் அவர்கள் மீதே நோக்கமாயிருக்கின்றது. ***பூமியிலுள்ள யாரோ ஒருவர் நம்மீது அன்பாய் இருக்கின்றார் என்ற உணர்வானது, மற்றவரிடம் போய் எதையேனும் கேட்பதிலிருந்து நம்மைத் தடைப்பண்ணிவிடும். அப்படியானால், பரத்திலிருக்கும் ஒருவர் நம்மீது அன்பாய் இருக்கின்றார் என்றால், இது எவ்வளவாய் மற்றவரிடம் நாம் போகாதபடிக்கு நம்மைத் தடைபண்ணிவிடும். அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பைப் போன்று, யார் ஒருவரும் ஒருபோதும் நம்மீது உண்மையாய் வைத்ததுமில்லை; அவருடைய அன்புபோன்று அவ்வளவு உறுதியாகவும், அவ்வளவு ஆழமாகவும் யார் ஒருவரும், ஒருபோதும் அன்பு வைத்ததுமில்லை.*** அவர் நம்முடைய பிதா ஆவார் மற்றும் நாம் அவர் பிள்ளைகள் ஆவோம்; மேலும் ஒரு பிள்ளை, பெற்றோரின் அன்பில் தனது எதிர்பார்ப்பினை வைத்துக்கொள்வதுபோன்று, நாமும் அவருடைய அன்பில் நமது எதிர்பார்ப்பினை வைத்துக்கொள்ள வேண்டும்.

அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் ஆவார். அவர் அனைத்துக் காரியங்களையும் தம்முடைய கைக்குள் வைத்திருக்கின்றார். அவரை அன்புகூருபவர்களுக்கு, அவர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடக்கச்செய்திட முடிபவராவார். தேவன் தாராள மனமுடையவர் ஆவார்; அவர் கொடுப்பதற்கே பிரியப்படுகிறவர் ஆவார்; அவர் எப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கின்றவராகவே காணப்படுகின்றார். "**தம்முடைய**

***சொந்தக்குமாரனென்றும்பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?”*** (உரோமர் 8:32)

மல்கியா 3:10-ஆம் வசனத்தில் அவர் கூறியுள்ளதாவது: ***“என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.”*** இயேசு ஆயிரக்கணக்கானோரைப் போஷித்தபோது, முதலாவது இருந்த உணவைக்காட்டிலும், மீதியிருந்த துணிக்கைகளின் எண்ணிக்கை அதிகமாயிருந்தது என்று பார்க்கின்றோம்.

வனாந்தரத்தில் இருந்த திரளான ஜனங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் பொழியப்பட்டபோது, அனைவருடைய தேவைக்கும் மிஞ்சின அளவில் காணப்படத்தக்கதாக, அது தாராளமாய்ப் பொழியப்பட்டது. வேதாகமத்தின் நிருபங்கள் தேவனுடைய தயாளத்தினால் நிரம்பியுள்ளது; “*அவரது கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியங்கள்*” குறித்தும், “அவரது பலத்த சத்துவத்தின் வல்லமை” குறித்தும், “பூரணமாய்ப் பெருகும் கர்த்தரின் கிருபை” குறித்தும், மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள்” குறித்தும் நாம் வாசித்திருக்கின்றோம்.

ஆகையால் சகோதர சகோதரிகளே, ***நம்முடைய தேவைகளின்போது, தேவனுடைய இயல்புகள் குறித்து நினைத்துப்பார்ப்பதும், அவரது குணங்கள் குறித்துத் தியானிப்பதும், ஜெபத்தில் நாம் காத்திருப்பதற்கு மிகுந்த உதவியாக இருக்கும்.*** ஒருவேளை நம்முடைய விசுவாசம்

தடுமாறுமானால், தேவனுடைய இயல்புகள் மற்றும் குணாதிசயங்கள் குறித்த இந்த எண்ணங்களை நம்முடைய மனதிற்குள் கொண்டுவருகையில், நிச்சயமாகவே நம்முடைய விசுவாசம் அதிகரிக்கும் . . . நம்முடைய எதிர்பார்ப்பு/காத்திருப்பு பெலப்படும்; மேலும் நம்முடைய ஜெபத்தில் மனமார்ந்த ஓர் உண்மையும் காணப்படும்.

## ஜெபத்தில் காத்திருப்பதன் பலன்கள்

இப்பொழுதோ ஜெபத்தில் *காத்திருப்பதன் பலன்கள்* குறித்துப் பார்க்கலாம்.

நம்முடைய ஜெபங்கள் மிகவும் திட்டவட்டமான நோக்கமுடையவையாகுவதே பலன்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. தேவனுடைய பிள்ளையானவன் வாஞ்சிக்க வேண்டும் என்று நம்முடைய ஆவிக்குரிய அறிவு நமக்குத் தெரிவித்திடும் காரியங்களுக்காக நாம் ஜெபம்பண்ண வேண்டியவர்களாக இருக்கின்றோம்; இப்படி நாம் ஜெபிக்க வேண்டிய அநேகக் காரியங்கள் இருக்கின்றன; ஆனால் அவைகளையெல்லாம் நாம் உண்மையாகவே வாஞ்சிக்கின்றோமா? அவைகளுக்காக நாம் ஜெபத்தில் வேண்டிக்கொள்கையில், அவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆவலோடு இருக்கின்றோமா/விசாரங்கொள்கின்றோமா? தேவன் ***அவருக்கே உரிய வழியில்*** நம்முடைய விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று உண்மையில் நாம் ஆவல் கொண்டவர்களாகக் காணப்படுகின்றோமா? நாம் ஜெபம்பண்ணும்போது, ***பதிலளிக்கப் போகும் வழிமுறையினை***, நாம் அவரிடத்திலேயே விட்டுவிட வேண்டும். ஜெபத்தில் காத்திருப்பதற்கும், பதில் ஒன்று உண்மையில்

வருமென விசுவாசிப்பதற்கும் நாம் கற்றுக்கொண்டிருப்போமானால், நாம் நிச்சயமாகவே தேவனிடத்தில் எவைகளை விண்ணப்பிக் கின்றோமோ அவ்விஷயத்தில் நாம் திட்டவட்டமாகவே காணப்படுவோம். நம்முடைய சக மனிதர்களை அணுகுகையில் நாம் திட்டவட்டமாகவே காணப்படுகின்றோம்; நமக்குத் தேவையில்லாத ஏதோ ஒன்றிற்காக, அர்த்தமற்ற விண்ணப்பங்களை நாம் சக மனிதனிடத்தில் முன்வைப்பதில்லை; ஆகையால் அருமையான சகோதர சகோதரிகளே, நமது சக மனுஷரிடத்தில் அணுகுகையில் நாம் காண்பிப்பதைவிட குறைவான நிச்சயத்துடன் மற்றும் மனமற்ற நிலையுடன் தேவனை அணுகாமல் இருப்போமாக. நாம் அவரிடத்தில் ஜெபம்பண்ணும்போது நாம் சொல்வதை, உண்மையில் நாம் நிதானித்துப்பார்த்து சொல்வோமாக. நாம் விரும்பாத மற்றும் வாஞ்சிக்காத காரியங்களைத் தேவன் தரவேண்டும் என்று ஜெபம்பண்ணாதிருப்போமாக.

இப்படி ஜெபத்தில் காத்திருப்பதன் இன்னுமொரு நல்ல பலன், *ஜெபம்பண்ணுவதற்கு மிகவும் மனமுவந்து காணப்படும் நிலை உருவாகுதலாகும்.*

தேவன் நம்முடைய விண்ணப்பங்களுக்கு அருள் செய்வார் என்று நாம் நம்புவோமானால், நாம் தேவனிடம் செல்வதற்கும், விண்ணப்பம் பண்ணுவதற்கும் மிகவும் மனமுவந்து காணப்படுவோம். பொதுவாக நம்முடைய விண்ணப்பங்கள் மறுக்கப்படும் என்கிற இடங்களுக்கு நாம் செல்வதற்கும், உதவி கேட்பதற்கும் முற்றிலும் வெறுப்போம். அப்படியான இடத்திற்குச் செல்வதற்கும், விண்ணப்பம்பண்ணுவதற்கும் நம் இருதயம் விரும்பாது; ஆனால் உண்மையில் நாம் தேவனிடத்தில் எதிர்பார்ப்பு கொண்டவர்களாகக்

காணப்படுவோமானால், நமக்குத் தேவையாய் இருப்பவைகள் குறித்து அவரிடம் கேட்பதற்கும், அவரிடம் செல்வதற்கும் நாம் மிகவும் மனமுவந்து காணப்படுவோம். ஜெபத்தில் ஊக்கமின்மைக்கான/ நாட்டமின்மைக்கான காரணங்களில் ஒன்று, பதில் கிடைப்பது தொடர்புடைய விஷயத்தில் நம்முடைய சந்தேகமும், நிச்சயமின்மை யுமாகும். இக்காரணங்களானது, ஜெபம்பண்ணுவதற்குரிய நம்முடைய மனப்பூர்வமான ஆவலுள்ள நிலையை எடுத்துப்போட்டு விடுகின்றது; மேலும் ஜெபத்தைப் பாக்கியமான சிலாக்கியமாகக் கருதுவதற்குப் பதிலாக, அதைக் கடினமாய்ப் பிரயாசப்பட்டு எடுக்க வேண்டிய ஒரு காரியமாக மாற்றி விடுகின்றது.

இன்னுமொரு நன்மையான பலன் என்னவெனில் . . . நித்திய தேவனை நாம் பெற்றிருக்கின்றோம் என்ற நம்முடைய உணர்ந்துகொள்ளுதலின் காரணமாக, மனுஷனிடத்தில் நாம் வைக்கும் எதிர்பார்ப்பும், மனுஷனைச் சார்ந்திருக்கும் காரியமும் குறைந்துவிடுகின்றது. ஜீவனுள்ள தேவனில் விசுவாசம் வைப்பதற்குப்பதிலாக, மாம்சமான மனுஷனில் நம்பிக்கை வைக்கும் அபாயம் எப்போதுமே காணப்படுகின்றது; ஆகையால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க தேவன் விருப்பமுள்ளவராகவும், வல்லமையுள்ளவராகவும் இருக்கின்றார் என்பதை அறிந்தவர்களாக, நாம் நம்முடைய தேவைகளைத் தேவனிடம் சொல்பவர்களாகவும், பதிலை அவரிடத்திலிருந்து எதிர்பார்க்கின்றவர்களாகவும் காணப்படுவோமாக. மனிதன் மீது சார்ந்திராமல் இருப்போமாக.

ஜெபத்தில் இப்படியாக நாம் எதிர்பார்த்திருத்தல் என்பது, ஜெபம் ஏறெடுக்கப்பட்ட பிற்பாடு, நம்முடைய மனங்களை மிகவும் சந்தோஷமாக்கிவிடுகின்றது. தேவன் மீது நம்முடைய பாரங்களை

இறக்கி வைக்கையில், நம்முடைய பாரச்சுமை குறைகின்றது. நம்முடைய பிரச்சனைகளை அவரிடத்தில் ஒப்படைத்துவிடுகிற காரியமே, நமக்கு ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுத்து விடுகின்றது. நாமோ: "என்னுடைய தேவன் இந்தக் காரியத்தைத் தம் கரத்தில் எடுத்துக்கொள்வார்; என்னுடைய மேலான நன்மைக் கேதுவாக அவர் அனைத்தையும் சீர்ப்படுத்துவார். எனக்காக அவர் தம் ஞானத்தையும், சகல ஆதாரங்களையும் பயன்படுத்துவார். என் விஷயங்கள் அனைத்தும் அவர் பொறுப்பில் காணப்படுகின்றது" என்று சொல்ல முடிகின்றவர்களாய்க் காணப்படுவோம்.

நம்முடைய பிரச்சனைகளைத் தேவனிடம் ஜெபத்தில் ஒப்புக்கொடுத்துவிடுவதற்கு முன்பாக நாம் எப்படித் துக்கமாகக் காணப்பட்டோமோ, அதுபோலவே ஜெபம்பண்ணின பிற்பாடும் துக்கமாக நாம் அடிக்கடிக் காணப்படுகின்றோமல்லவா? ஜெபத்தின்போது நம்முடைய பாரங்களைச் சிங்காசனத்திற்கு எடுத்துச் சென்றிருப்போம், பின்னர் மறுபடியுமாக அதை நம்மோடு கூடத் திரும்ப எடுத்து வந்திருப்போம். அப்படி ஒருவேளை ஜெபத்தில் எதையேனும் இறக்கி வைத்திருப்போமானால், நாம் தேவனிடத்தில் பகுதியளவே இறக்கி வைத்தவர்களாக இருந்திருப்போம். தேவன் நம்முடைய பாரங்களைச் சுமக்கும்படி எதிர்பார்ப்பது என்பது மிதமிஞ்சின காரியம் என்று எண்ணினவர்களாக, நம்முடைய பாரங்களை நம்மீதே இறுக்கமாகக் கட்டி வைத்திருந்திருப்போம். இப்படிச் செய்யாதிருப்போமாக. கண்களில் கண்ணீருடனும், கனத்த இருதயங்களுடனும் நாம் சிங்காசனத்திற்கு முன்பு கடந்துபோயிருப்போமானால், நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் களிகூர்ந்தவர்களாக, பரவசமான நடையுடன் திரும்பி வர நாடிடுவோமாக.

ஜெபத்தில் காத்திருத்தல் என்பது, (காணப்படும் வசதி வாய்ப்புகளை) "*வழிவகைகளைப்*" (means/resources) பயன்படுத்துவதற்குரிய ஊக்கத்தினைக் குறைத்துப்போடாதா? என்று சிலர் எண்ணலாம். அப்படியாக அல்ல. ஜெபத்தில் காத்திருத்தல் என்பது, வழிவகைகளைப் பயன்படுத்துவதற்குரிய ஊக்கத்தினை அதிகமாய்க் கொடுக்கின்றது.

ஜெபத்திற்குப் பதிலளிக்கத்தக்கதாக "எந்த ஒரு வழிவகைகளையும்" பயன்படுத்தாமலே தேவனால் காரியங்களை நடபிக்க முடியும். எனினும் அவர் கிட்டத்தட்ட அனைத்துத் தருணங்களிலும் வழிவகைகளைக் கொண்டே காரியங்களை நடப்பிக்கின்றார். அபூர்வமாகத்தான் அந்த வழிவகைகள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டப்படாமல் காணப்படும். அவைகள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டப்படும்படியாக நாம் வேண்டிக்கொள்ள வேண்டும்; மேலும் இப்படியாக ஜெபம்பண்ணும்போது, அவைகள்குறித்து நமக்கு வெளிப்படுத்தப்படும்; மேலும் நாமும் வைராக்கியத்துடனும், ஊக்கத்துடனும் காரியங்களை நடப்பிப்போமாக.

ஆகையால் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, நம்முடைய ஜெபங்களுக்கான பதிலுக்காகக் காத்திருப்போமாக. சங்கீதக்காரன் போன்று நாமும்: "*நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்; கர்த்தர் என்னை இரட்சிப்பார். அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்*" என்று சொல்வோமாக (சங்கீதம் 55:16-17). ஆனால் சங்கீதக்காரனோடு சேர்ந்து இப்படிக் கூறுகின்ற நாம், "பதில் வரும்" என்று விசுவாசிக்கின்றவர்களாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாகப் *பதிலுக்காக நாம் விழிப்புள்ளவர்களாகத் தேடவும்*

***வேண்டும்.*** நம்முடைய விண்ணப்பங்களை ஏறெடுத்த பிற்பாடு, பதில் வந்தாலும், வராவிட்டாலும் ஒன்றுமில்லை என்பதுபோல், அவைகளைக் குறித்துப் பிற்பாடு சிந்தித்துப் பார்க்காதவர்களாக நாம் காணப்படுவதற்கு வாய்ப்புண்டு. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், ஒருவேளை ஜெபத்திற்கான பதிலாக சில விஷயங்கள் கடந்துவந்திருக்கும்; ஆனால் அப்படியாக அது கடந்து வருவதை அடையாளம் கண்டுகொள்ள நாம் தவறிப் போயிருந்திருப்போம்; மேலும் இதற்காக நமது பரம பிதாவிற்கு நாம் நன்றியினை ஏறெடுக்காதவர்களாகவும் காணப்படுவோம்.

தேவனிடம் ஜெபம்பண்ணிவிட்டு, நம்முடைய ஜெபத்திற்கான பதிலுக்காக விழிப்புடன் பார்க்காமல் காணப்படுவது என்பது அவரைக் ***கனம்பண்ணும் காரியமாகக் காணப்படாது.*** அவர் பதில் கொடுத்தவராயிருக்க, அவரது ஈவென நாம் பெற்றுக்கொண்டிருக்கும் அந்தப் பதிலினை நாம் அடையாளம் கண்டுகொள்ளாமல் இருப்பது என்பது, ***தேவனுக்கான மகிமையினை நாம் திருடிவிடும் காரியமாகக் காணப்படும்.*** நம்முடைய காத்திருப்பில் நாம் ***பொறுமையுடனும்*** காணப்பட வேண்டும். காத்திருப்பதில் இந்தப் "பொறுமை" என்பது மிகவும் முக்கியமான காரியமாகும். தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல; அவருடைய நினைவுகள் நம்முடைய நினைவுகள் அல்ல; நம்முடைய அநேக ஜெபங்களுக்கு, நாம் நினைத்த நேரங்களில் அல்லது நாம் நினைத்த விதங்களில் பதிலளிக்கப்படுவதில்லை. நம்முடைய பொறுமையானது அநேகச் சோதனைகளினால் சோதிக்கப்படும். தேவனுடைய பிள்ளைகள் அவருக்காகக் காத்திருக்கும்போது, அவர் கனப்படுத்தப்படுகின்றார்; சாத்தானும், அவர்களது விசுவாசத்தினை

அசைப்பதற்குரிய பிரயாசத்தினை ஏறெடுக்காமல், அவர்கள் காத்திருக்கும்படிக்கு விட்டுவிட்டு வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதில்லை. இன்னுமாக நம்முடைய ஜெபங்களுக்கான தேவனுடைய பதில் வேகமாகக் கிடைக்கத்தக்கதாக, நம்மால் ஏறெடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் மோசமான பலன்களையே கொண்டுவரும் என்பதையும் நினைவில் கொள்வோமாக. தேவனுடைய சித்தத்திற்கு இசைவாகத்தான் நம் விண்ணப்பம் காணப்படுகின்றது என்பதில் நமக்கு மிகுந்த நிச்சயம் காணப்படுகின்றது என்றாலும், ***காலம்*** தொடர்புடைய விஷயத்தை நாம் முற்றிலுமாக அவர் சித்தத்தின்படியே விட்டுவிட வேண்டும். அனைத்துக் காரியங்களும் நமக்கு எதிராய்ச் செயல்பட்டுக் கொண்டிருக்கையில், பொறுமையோடு எதிர்பார்த்துக் காத்திருத்தல் என்பது, கொஞ்சம் கடினமான காரியமேயாகும். மாதங்கள் கடந்து செல்லலாம், வாரங்கள் கடந்து செல்லலாம், பதில் வராமலே காணப்படலாம்; ஆனால் ***அவரது பாதப்படியில் அமர்ந்து காத்திருப்பதும், அவரது ஏற்பாடுகளைத் துரிதப்படுத்த முயற்சிக்காமல் இருப்பதும்தான்*** நமக்கடுத்த காரியமாகக் காணப்பட வேண்டும்.

## ஜெபத்தில் இருக்க வேண்டிய தீவிரம்

இப்பொழுதோ ஜெபத்தில் இருக்க வேண்டிய ***தீவிரம்/ஊக்கம்*** குறித்துச் சிறிது நேரம் பார்க்கலாம். தீவிரமாய் ஜெபம்பண்ணுவதற்குரிய இரண்டு வேறுபட்ட காலங்கள் உண்டு. அவை பின்வருமாறு:

- சில சந்தர்ப்பங்களில் தீவிரமாய் ஜெபம்பண்ண வேண்டியிருக்கும்.

- ஆவியின் உந்துதலினால் செயல்பட வேண்டிய மற்றும் உடனடியாகச் செயல்பட வேண்டிய சில காலங்களில், தீவிரமாய் ஜெபம்பண்ண வேண்டியிருக்கும்.

சில சமயங்களில் குறிப்பிட்ட கால வேளைக்குள்ளாகவும், அதேவேளையில் வேகமாகவும், காரியம் ஒன்றிற்குத் தீர்வு காணவேண்டிய சூழ்நிலைக்குள்ளாக நாம் கொண்டுவரப்படுவோம். இப்படியான கட்டங்களுக்குள் நம்மைக் கொண்டுவருவதன் மூலமாக *ஜெபத்தில் தீவிரமாய்க் காணப்படுவது என்பது என்ன* என்று தேவன் அடிக்கடி நமக்குக் கற்றுத்தருகின்றார். மேலும் நாம் எவ்வளவு தீவிரமற்று அடிக்கடி ஜெபம்பண்ணியிருந்திருக்கின்றோம் என்றும் நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

சடுதியான ஆபத்து நம்மீது வரும் காலங்களும்கூட, ஜெபத்தில் நாம் தீவிரம் காட்டுவதற்குரிய காலங்களாக இருக்கின்றன. நாம் சடுதியாய்ப் பிரச்சனைக்குள்ளாக இருப்பதையும், வழிவகைகள் எதுவும் இல்லாதவர்களாக மற்றும் நண்பர்களின் துணை இல்லாதவர்களாகக் காணப்படுவதையும் உணரலாம்; இம்மாதிரியான தருணங்களில் நாம் உடனடியாக தேவ சமுகத்திற்குள் தஞ்சம் புகுகின்றவர்களாக நம்மை நாம் காணலாம்.

மனித ஆதரவிற்கும் அதிகமான ஏதோ ஓர் உதவி வேண்டும் என்ற நிலை உருவாகும், இல்லையேல் நம்மீது சடுதியாக வந்துள்ள நெருக்கடியின் பாரத்தினை நம்மால் சுமக்க இயலாது என்ற நிலை உருவாகும். நம்மீது வந்துள்ள இந்த மகா துன்பத்தின் காரணமாக நாம் ஜெபத்தில் தீவிரமாய்க் காணப்படும்படிக்கு உந்தித்தள்ளப் படுவோம். இம்மாதிரியான சடுதியான துன்பங்கள் நமக்கு வருகையில், தீவிரமாய் ஜெபிக்கும் அந்தச் சில வினாடிகள் போன்று, வேறு எதுவும் நம் மனங்களை அமைதிப்படுத்திட முடியாது மற்றும்

சிந்தைகளைச் சமாதானப்படுத்திட முடியாது. தேவன் நம் பட்சத்தில் இருக்கின்றார் என்றும், அவரில்லாமல் நம்மால் சமாளிக்க வாய்ப்பில்லாத அப்பிரச்சனைகளை, அவர் உதவியினால் சமாளிக்க முடியும் என்றும் நாம் நிச்சயம்கொண்டு இளைப்பாறலாம்.

நாம் ஜெபம்பண்ண வேண்டிய காரியங்களின் "முக்கியத்துவம் அல்லது மகத்துவம் குறித்த விசேஷித்த உணர்ந்துகொள்ளுதலும் கூட" தீவிரமாய் ஜெபிப்பதற்குரிய மற்றுமொரு காரணமாய்க் காணப்படுகின்றது. நாம் எதற்காக ஜெபம்பண்ணுகின்றோமோ, அவை எவ்வளவு பெரிதான ஆசீர்வாதங்களாகக் காணப்படுகின்றன என்பதை நாம் எப்போதும் உணர்ந்து கொண்டவர்களாக இருப்பதில்லை; இதன் காரணமாக நம்முடைய ஜெபங்கள் மந்தமாய்க்/ஊக்கமற்றுக் காணப்படுகின்றன; ஆனால் நமக்கான வழிவகைகள் முழுவதும் அடைபட்டுப்போய், நம்மீது கடுமையான அழுத்தம் ஏற்படுகையில், ஜெபத்தில் தீவிரமாய்க் காணப்படுவதன் அர்த்தம் என்ன என்று நாம் கற்றுக்கொள்கின்றவர்கள் ஆகுகின்றோம். ஏதோ ஓர் ***அற்பமான வழிவகையானது*** நம்மையும் அறியாமலேயே அல்லது நாம் திட்டமிடாமலேயே, ஜெபத்திலுள்ள நம்முடைய தீவிரத்தினைப் பாதிக்கும்படிக்கு நாம் அனுமதிக்க வாய்ப்புண்டு; ஆனால் உண்மையில் இப்படியாகக் காணப்படுவதற்கு நாம் விரும்புகிறதில்லைதான்; தேவனை மட்டுமே சார்ந்திருக்க நாம் விரும்புகின்றோம்; அவரை மாத்திரமே ஏறெடுத்துப் பார்க்க விரும்புகின்றோம்; ஆனால் பாவப்பட்ட, பலவீனமான மனித சுபாவமோ, அருகாமையில் காணப்படுவது போன்று தோன்றும் ஏதோ சில (அற்பமான) வழிவகைகள்மீது அல்லது நமது கைக்கு எட்டினால் நன்மை தருவதாக இருக்குமென நமக்கு அதிகம் நம்பிக்கைத் தரக்கூடிய ஏதோ சில வழிவகைகள் மீது நமது கண்களை அலைப்பாயவிடுகின்றது.

இப்பொழுது ஆவியின் உந்துதலினால் தீவிரமாய் ஜெபம்பண்ண ஏவப்படும் சில அனுபவங்களைப் பார்க்கலாம்.

நாம் உண்மையாய் வாஞ்சித்திருந்த விஷயத்திலும், நன்றாய்ச் செய்ய வேண்டும் என்று நாம் தீர்மானித்திருந்த விஷயத்திலும் ஏதோ ஒரு கட்டத்தில் நாம் தோல்வியடைந்துவிட்டோம் . . . இதைக்குறித்தோ அல்லது கடந்த காலத்தின் ஏதோ ஒரு தோல்வியைக் குறித்தோ நினைத்துக்கொண்டே இருக்கின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நம்மிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் கர்த்தருடைய ஆவியானது, இப்பொழுதும் நம்முடைய பலவீனங்களைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள்; இன்னுமாக நாம் எவ்வளவுதான் நேர்மை உள்ளவர்களாக, நல் நோக்கம் உள்ளவர்களாகக் காணப்பட்டாலும், பிரயாசம் எடுப்பதில் துரிதமுள்ளவர்களாகக் காணப்பட்டாலும், இதையும் தாண்டி நம் நிலைமை என்ன என்று அந்த ஆவியானது நமக்கு நிரூபித்துக் காட்டுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். இதனால் வேதனை அடைந்தவர்களாகவும், நம்மை நாமே கடிந்துகொண்டவர்களாகவும் இருக்கையில், இன்னுமாக எதிர்காலத்தில் உள்ள நமது நிலைமைக்குறித்து பயமும் ஏற்படுகையில், ஜெபத்தில் நாம் தீவிரம் கொள்கின்றவர்களாக மாறிவிடுவோம். நாம் தேவனை நோக்கிப் பார்ப்போம், அவரில் தஞ்சம் புகுவோம்; கிறிஸ்துவிலுள்ள நம்முடைய நிலையினை நினைவுகூருவோம்; ஜெபத்தில் தீவிரமடைந்தவர்களாக: “என் ***கன்மலையாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்***; ***நீர் கேளாதவர்போல மவுனமாயிராதேயும்***” என்ற வார்த்தைகளைக் கூறுகின்றவர்களாகக் காணப்படுவோம். (சங்கீதம் 28:1)

## பலன்களாகிய இளைப்பாறுதல், சந்தோஷம் மற்றும் சமாதானம்

இடைவிடாமல் ஜெபம்பண்ணுவதன் பலன் என்பது, தேவனிலும், நமது மீட்பராம் கிறிஸ்துவிலும் கண்டடையப்படும் ***இளைப்பாறுதல், சந்தோஷம் மற்றும் சமாதானம்*** என்பவைகளே ஆகும்.

நாம் உள்ளான ஆறுதலுக்காகவும், சமாதானத்திற்காகவும் ஆவலோடு ஏங்குவோம். எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நமக்குத் தேவை என்று வாஞ்சிப்போம். ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் ஒன்று உள்ளது என்று போதிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம்; அதையே நாம் வாஞ்சிக்கவும் செய்கின்றோம்; அதை நாம் (இக்காலத்தில்) சொந்தமாக்கிக்கொள்ளவில்லை என்றாலும், அதன் ஆசீர்வாதமான தன்மை என்ன என்று நாம் காண்கின்றோம். இது ஜெபத்தில் நாம் தீவிரம் கொள்வதற்கு வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது. இந்தச் சமாதானத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாய் இருக்கின்றது; ஆனாலும் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே இடைவிடாமல் ஜெபம் பண்ணுவதன் மூலமாக மாத்திரமில்லாமல், கர்த்தரால் அருளப்பட்டுள்ள சகல ஏற்பாடுகள் மூலமாகவுந்தான், அச்சமாதானமானது உண்மையாய் வாஞ்சித்து நாடப்பட வேண்டும் என்பதையும் நாம் அறிவோம்.

"***என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்***" என்று நமது ஆண்டவர் கூறியுள்ளார். இளைப்பாறுதல் என்பது கொடுக்கப்படுகின்ற ஒரு காரியமல்ல, மாறாக அடையப்படுகின்ற ஒரு காரியமேயாகும். அது ஒரு செயலால் வராமல், பல செயல்களின் விளைவாகக் கிடைக்கின்றது. ஆவிக்குரிய காரியங்களைப் பொருத்தமட்டில், தேவன் பதிலளிப்பதற்கு மறுப்புத் தெரிவிப்பதில்லை; ஆனால் அந்தப்

பதிலானது எப்படி மற்றும் எப்போது மற்றும் எந்த வழிகள் மூலம் பதிலளிக்கப்படும் என்பவைகளை முழுவதுமாக நாம் அவர் கரத்தில் விட்டுவிட வேண்டும்.

ஆமென்!!

*- BIBLE STUDENTS CONVENTION, 1930*
சகோதரர் *I.I. Margeson*
*(தமிழாக்கம்)*

SOMEONE ONCE SAID

## ஜெபம்

- ஜெபம்பண்ணாத கிறிஸ்தவன், வாழ்க்கையில் விளையாடிக்கொண்டிருப்பவனாகக் காணப்படுவான்.
- உலகப்பிரகாரமான கிறிஸ்தவன் ஜெபம்பண்ணுவதை நிறுத்திக்கொள்வான்; ஆனால் ஜெபம்பண்ணுகின்ற கிறிஸ்தவனோ உலகப்பிரகாரமாய் இருப்பதை நிறுத்திக் கொள்வான்.
- ஜெபம்பண்ணுவதின் நோக்கமாவது, தெய்வீகச் சித்தத்தை மாற்றுவதற்காக என்றில்லாமல், மாறாக அதற்கு நாம் ஒத்துப்போவதற்காகவே ஆகும்.
- ஊன்றி நிற்பதற்குரிய கால்கள் இல்லை என்ற நிலைமை வராததுவரையிலும், சிலர் தங்கள் முழங்கால்களை ஜெபத்திற்கு முடக்குவதில்லை.
- அதிகமாய் முழங்காற்படியிடுகிறவனே, சிறந்த விதத்தில் நிற்கின்றவனாய்க் காணப்படுவான்.

# கோலிக்குண்டு இனிமேல் அவசியமில்லை

ஒருநாள் ஒரு பெண்மணி தனது சகோதரன் மகனுக்குப் பாடம் கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அச்சிறுவன் பொதுவாகவே நல்ல பிள்ளையாகவும், கருத்தாய்ப் பாடங்களைக் கவனிக்கும் பிள்ளையாகவும் காணப்பட்டான்; ஆனால் அன்றைய தினமோ அவனால் பாடத்தைக் கவனிக்கவே முடியவில்லை. திடீரென அச்சிறுவன்: "அத்தை! காணாமல்போன எனது கோலிகுண்டைக் கண்டுபிடிக்க உதவி அருளுமெனத் தேவனிடம் நான் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணலாமா?" என்று வினவினான். அத்தையும் அனுமதியளிக்க, அச்சிறுவன் முழங்காற்படியிட்டு, தன் கண்களை மூடி, அமைதியாய் ஜெபம்பண்ணினான். பின்னர் எழுந்து தன் பாடங்களைச் சலனம் இல்லாமல் கற்கத் துவங்கினான். தனது விளையாட்டு சாமானைக் கண்டுபிடிக்க முடியாததால், அந்தச் சிறுவனின் எளிமையான விசுவாசம் தொலைந்து போய்விடுமோ என்ற அச்சத்தில் அடுத்தநாள் அந்தப் பெண்மணி சிறுவனிடம் விசாரிக்கத் தயங்கினாள். பின்னர் அவள்: "அன்பு குழந்தையே, உனது கோலிக்குண்டைக் கண்டுபிடித்துவிட்டாயா?" என்று வினவினாள். சிறுவனோ: "இல்லை அத்தை! ஆனால் ***அதைத் தேடவேண்டும் என்ற எண்ணத்தைத் தேவன் என்னிடமிருந்து மாற்றிவிட்டார்*** " என்று பதிலளித்தான்.

***எல்லாச் சமயங்களிலும் நாம் விரும்புகின்ற அல்லது எதிர்பார்க்கின்ற விதத்தில் தேவன் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறதில்லை; ஆனாலும் நாம் அவரிடம் உண்மையாய் ஜெபிக்கும்போது, அவர் சித்தத்திற்கு எதிரானவைகளை***

***நம்மிடமிருந்து எடுத்து மாற்றிப்போட்டுவிடுவார்; மேலும் அனைத்தும் அவரது பரிசுத்த சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று நாம் விட்டுவிடுவதற்குரிய விசுவாசத்தினை நமக்கு அருளுகின்றார்.***

# மறுரூபமாக்கும் சத்தியங்கள்

[தமிழாக்க வெளியீடுகள்]

1. கிறிஸ்தவ திருமணம்
2. முறுமுறுப்பு
3. பாதங்கழுவுதல்
4. பெருமை
5. மன அழுத்தம்
6. குற்றங்கண்டுபிடித்தல்
7. ஜெபம்

பிரதிகள் தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
84287374 74; 9442221874